0048

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் (சிறப்பு) கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 06

இறுதிப்பரீட்சை – 2023

**SNU6220/ESU4220** – விசேட தேவைகள் சார் கல்விக்கான கல்வித் தொழில்நுட்பம்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 02.12.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

---

பகுதி - **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - **II** மற்றும் பகுதி - **III** களில் இருந்து (எவையேனும்) தலா இரண்டு (02) வினாக்களுக்கும் விடைதருக.

## பகுதி – I

**01.**

1. கல்வித் தொழிநுட்பத்தின் (Educational Technology – ET) பொருளை இரண்டு (02) எடுத்துக்காட்டுக்களுடன் வரைவிலக்கணப்படுத்துக.
2. கல்வித் துறையில் "தகவல் தொழில்நுட்பம்" மற்றும் "உதவி தொழில்நுட்பம்" ஆகியவற்றுக்கு இடையேயான ஐந்து (05) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
3. விசேட கல்வித் தேவைகளையுடைய குழந்தைகளின் கற்றல் - கற்பித்தல் செயல்முறையின் போது இணையப் பயன்பாட்டின் ஐந்து (05) பயன்பாடுகளைக் குறிப்பிடுக.
4. பாரம்பரிய ஆசிரியர்களுடன் ஒப்பிடுகையில், ஓர் ஆசிரியர் வசதியளிப்பவரான நவீன பாத்திரத்தின் முக்கியத்துவங்கள் மூன்றினை (03) விளக்குக.
5. விசேட கல்வித் தேவைகளையுடைய குழந்தைகளுக்குக் கற்பிக்கும் போது, கண்டறிமுறையின் ஐந்து (05) தீமைகளை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
6. பிரச்சினை தீர்க்கும் முறையுடன் தொடர்புடைய இரண்டு (02) பிரதான செயல்முறைகளைக் குறிப்பிட்டு ஒரு செயல்முறையின் நான்கு (04) படிகளைக் குறிப்பிடுக.
7. உள்ளடங்கல் வகுப்பறையில் அணிமுறைக் கற்பித்தலின் ஐந்து (05) நன்மைகளை விளக்குக.
8. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பித்தல் நுட்பங்களில் முக்கியத்துவங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

02.

(அ) செயற்திட்ட முறையின் நான்கு (04) பொதுப் படிகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டை (02) எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(07 புள்ளிகள்)**

(ஆ) உள்ளடங்கல் வகுப்பறைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் செயற்திட்ட முறையின் ஐந்து (05) நன்மைகள் மற்றும் தீமைகளை ஆராய்க. **(08 புள்ளிகள்)**

03.

(அ) ஒரு ஒப்படை முறையின் நான்கு (04) பிரதான அம்சங்களையும் நான்கு (04) முக்கிய பண்பியல்புகளையும் குறிப்பிடுக. **(07 புள்ளிகள்)**

(ஆ) குறைந்த பட்சம் ஐந்து (05) வெவ்வேறு வகையான ஒப்படைகளை மதிப்பீடு செய்து, உள்ளடங்கல் வகுப்பறையில் அவை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

04.

(அ) நீங்கள் பெருமூளை முடக்கு வாதம் உள்ள ஒரு மாணவருக்கு ஆசிரியராக இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள்.
பாடத்திட்டத்தைத் தயார்செய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டிய குறைந்தது **ஐந்து** (05) முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக. **(07 புள்ளிகள்)**

(ஆ) ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனம் உள்ள மாணவர்களின் வகுப்பு ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயல்முறையின் போது மாணவர்களை எவ்வாறு மீளவலியுறுத்துகின்றார்கள் என்பதை **மூன்று** (03) உதாரணங்களை முன்வைத்து ஆராய்க. **(08 புள்ளிகள்)**

05.

(அ) உள்ளடங்கல் வகுப்பறைக்கான கற்பித்தற் கருவிகளைத் தேர்ந்தெடுக்கும் போது ஓர் ஆசிரியராகக் கருத்தில் கொள்ள வேண்டிய **மூன்று** (03) முக்கியமான விடயங்களை விளக்குக. **(07 புள்ளிகள்)**

(ஆ) உள்ளடங்கல் வகுப்பறையில் கற்றற் சாதனங்களை எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பது தொடர்பில் **மூன்று** (03) விடயங்களை முன்வைத்து ஆராய்க. **(08 புள்ளிகள்)**

## பகுதி – III

06.

(அ) நீங்கள் கற்பிக்கும் ஒரு தரத்தின் ஒரு பாடத்திலிருந்து ஒரு பாடவேளையைத் தேர்ந்தெடுக்கவும். 40 நிமிடங்களுக்கு ஒரு பாடத்திட்டத்தை உருவாக்குக. நீங்கள் தெரிவு செய்த வகுப்பறையில் அதீத செயலூக்கம் மற்றும் அவதானக் குறைபாட்டுடன் ஒருவர் உட்பட 30 மாணவர்கள் உள்ளார்கள் எனக் கொள்க.
**(08 புள்ளிகள்)**

(ஆ) அதீத செயலூக்கம், அவதானக் குறைபாடு உள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கப் பாடத்திட்டத்தின் செயல்பாடுகளை மாற்றியமைத்து, அத்தகைய செயல்பாடுகளை மாற்றியமைக்கும் போது நீங்கள் கருத்தில் கொண்ட காரணிகளைக் குறிப்படுக. **(07 புள்ளிகள்)**

07.

(அ) பார்வையற்ற மாணவர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய உதவித் தொழில்நுட்பச் சாதனங்களை விளக்கி அத் தொழில்நுட்பத்தின் பயன்களை ஒரு கருவியாகவும் நுட்பமாகவும் ஆராய்க. **(07 புள்ளிகள்)**

(ஆ) தாழ் - தொழில்நுட்பம், நடுநிலைத் - தொழில்நுட்பம் மற்றும் உயர் - தொழில்நுட்பக் கருவிகள் அல்லது சாதனங்களின் ஒவ்வொரு வகைக்கும் தலா **மூன்று** (03) எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விவரிக்குக.
**(08 புள்ளிகள்)**

08.

(அ) வீரியம் நிறைந்த இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கான தனியாள் மையக் கல்வித்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான படிகளை விளக்குக. **(07 புள்ளிகள்)**

(ஆ) தனியாள் மையக் கல்வித்திட்டங்களை உருவாக்கும் முன் குழந்தையின் செயல்பாட்டு திறன்களை தீர்மானிக்க பல்வேறு ஆதாரங்களில் இருந்து தகவல்களை சேகரிப்பதன் முக்கியத்துவத்தை ஆராயுங்கள்.
**(08 புள்ளிகள்)**

09.

(அ) நேர் திட்டக் கற்றலின் முக்கிய அம்சங்களை ஆராய்க. **(07 புள்ளிகள்)**

(ஆ) அறிவுசார் இயலாமைகள் உள்ள மாணவர்களின் கற்றலை ஊக்குவிப்பதற்காக திட்டக்கற்றல் முறையின் தரத்தினை (முக்கியத்துவம்) மதிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -